# திருக்குறள் வெளிப்படுத்தும் வாழ்வியல் ஒழுக்கம்

**முனைவர். ம. வனத்தையன்**
இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
தமிழ்த்துறை
தூய வளனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
கடலூர் - 1

**ஆய்வச்சுருக்கம்**
**உ**லகில் வாழும் ஒவ்வொரு மனிதரும் மகிழ்ச்சியாக வாழவிரும்புகிறார்கள். இவ்வுலகில் வாழும்போது மனிதர்கள் யாரும் துன்பத்தை விரும்புவது இல்லை. இவ்வுலகில் வாழும் மனிதர்களிடம் இவ்வுலகம் இன்பம் நிறைந்ததாஅல்லதுதுன்பம் நிறைந்ததா என்று கேட்டால் ஒவ்வொருவரும் அவர் அவருடைய அனுபவத்திற்கு ஏற்ப விடைகளை கூறுவர். ஆனால் திருவள்ளுவர் பலவழிகளில் ஆராய்ந்து தெளிந்து வாழ்க்கை ஒழுக்கத்தை வகுத்தநெறி போற்றுவதற்கும் பின்பற்றுவதற்கும் ஏற்ற ஒன்றாக உள்ளது. வள்ளுவர் கூறும் வாழ்வியல் ஒழுக்கம் உளவியலை அடிப்படையாகக் கொண்டே உள்ளது. திருவள்ளுவர் கூறிய வாழ்வியல் ஒழுக்கத்தை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**
மனிதன் அறச்சிந்தனை உடையவன். அந்த அறச்சிந்தனைகளை மனிதன் தன்னுடைய அகவாழ்விலும் புறவாழ்விலும் கடைபிடித்ததால் அவனது வாழ்க்கை செம்மை அடைந்தது. மனிதனுடைய அறப்பண்புகள் அவனது எண்ணம், சொல், செயல் இம்மூன்றிலும் வெளிப்பட்டது. அப்பண்புகள் எவ்வாறு மனிதனை நல்வழிப் படுத்துகிறது என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**உலகளாவியசிந்தனை**
சங்ககாலத்தைத் தொடர்ந்து தமிழுக்கும் தமிழர்க்கும் கிடைத்த சிறந்த நூல் திருக்குறள் ஆகும். திருக்குறளில் உலகளாவிய சிந்தனைகளும் மனிதனை உயர்த்தும் சிந்தனையுடைய பலநல்ல கருத்துகளையும் காணலாம். திருக்குறள் தமிழர்க்கு மட்டுமே என்ற நிலையைக் கடந்து உலகிலுள்ள அனைவருக்கும் பொதுவாக உள்ளது என்பதை உணர்ந்தபாரதியார்

"வள்ளுவன் தன்னைஉலகினுக்கேதந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"[1]

என்று புகழ்ந்து கூறியுள்ளார்.
திருக்குறளின் சிறப்பை உணர்ந்த மதுரைத் தமிழ் நாயனார்,

"எல்லாப் பொருளும் இதன்பால்உள இதன்பால்
இல்லாளப் பொருளும் இல்லையால்"[2]

என்று தெரிந்துரைத்துள்ளார். இக்கூற்று திருக்குறளின் காலமும் எல்லையும் கடந்து அதன் நுண்பொருள் சிறப்பை உணர்த்துகிறது.

## வாழ்வியல் ஒழுக்கம்

திருக்குறள் தான் தோன்றிய காலத்தோடு நின்றுவிடாமல் இந்த நூற்றாண்டில் வாழும் மனிதன் எப்படி வாழவேண்டும் என்று வாழ்க்கைப்பாடத்தைக் கற்றுக்கொடுக்கிறது. பிற இலக்கியங்களைப் போன்று திருக்குறள் இலக்கியம் என்னும் நிலையில் நின்றுவிடாமல் மனிதவாழ்வியல் கூறுகளைஒழுக்கங்களைக் எடுத்துக்காட்டும் பதிவுகளாகஉள்ளது.
சராசரிமனிதன் அன்றாட வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகளின் தொகுப்பாகத் திருக்குறள் படைக்கப்பட்டுள்ளது. மானிடப் பண்பு இயல்புகளுக்கு ஓர்உறைவிடமாய், வாழ்க்கை நெறிமுறைகளுக்கான வழிகாட்டியாய் அமைந்துள்ளது திருக்குறள் என்பதில் ஐயமில்லை.
உலகிலுள்ள அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்களில் திருக்குறள் இரண்டாமிடத்தில் உள்ளது. ஏல்லாமொழியினரும் எல்லாநாட்டினரும் எல்லா இனத்தவரும் தமக்குரிய நூல் திருக்குறள் என்று புகழ்ந்து கூறுகின்றனர்.

## வாழ்வியல் பயன்

மனிதன் அறம்,பொருள், இன்பம் ஆகிய முதன்மைப் பயனை அறிந்து கொள்வதற்குத் திருக்குறள் வழிகாட்டுகிறது. இந்த நூற்றாண்டில் வாழும் மனிதன் விரைவும் ஓட்டமும் காட்டுகிறான். அவனுடைய உள்ளத்தை உறுதிபடுத்தவும் வாழ்வியல் உண்மைகளை அறிந்து தெளிவுபெறவும்

திருக்குறள் ஊன்றுகோளாய் இருக்கிறது. இவ்வுலகில் வாழும் மனிதன் சிறந்த வாழ்க்கை வாழவேண்டுமென்றால் திருக்கறள் அவனுக்குத் துணையாக இருக்கும்.

## பன்முகப்பார்வை

தனிமனிதநிலை, குடும்பநிலை, உறவினர்நிலை, சமூகஉறுப்பினர்நிலை, குடிமக்கள்நிலை என்னும் நிலைகளில் மனிதர்கள் பாதுகாக்கவேண்டிய பண்புகள், ஆற்றவேண்டிய கடமைகள் எனப் பன்முகக் கூறுகளை அமைத்து முழுமையான வாழ்வியல் கருத்தாக்கத்தை வள்ளுவர் வழங்கியுள்ளார்.

## அன்புடைமை

மனிதசமுதாயம் மேம்பட வேண்டுமானால் அவனிடம் உள்ள தீயகுணங்கள் நீங்கி அனைவரிடமும் அன்புகாட்டவேண்டும். அன்புவழியைப் பின்பற்றினால் வெற்றிபெறமுடியும். அன்பு இல்லாத ஒருவனை எலும்புக்கூட்டின் மீதுதோல் போர்த்தப்பட்ட வெற்றுஉடம்பு என்கிறார் திருவள்ளுவர். இதனை,

"அன்பின் வழியது உயிர்நிலை அ∴திலார்க்கு
என்புதோல் போர்த்திய உடம்பு"[3]

என்ற குறளின் வழி தெளிவு படுத்தியுள்ளார் திருவள்ளுவர்.

"அன்பு பொறுமையுள்ளது, நன்மைசெய்யும், பொறாமைப்படாது, தற்புகழ்ச்சிகொள்ளாது, இறுமாப்புஅடையாது, அன்பு இழிவானதைச் செய்யாது, தன்னலம் நாடாது, எரிச்சலுக்கு இடம்கொடாது, தீங்குநினையாது, அன்புதீவினையில் மகிழ்வுறாது. மூறாக உண்மையில் அதுமகிழும். அன்பு அனைத்தையும் பொறுத்துக்கொள்ளும் ............. அன்பே தலைசிறந்தது"[4]
என்று விவிலியம் எடுத்தியம்புகிறது. நாம் இவ்வுலகில் அன்புசெய்து வாழ்ந்தால் அனைத்திலும் வெற்றி கொள்ளமுடியும்.

## உயிர்க்கொல்லாமை

உலகில் இயற்றப்படும் அறங்கள் பலவாகும். அவற்றுள் கொல்லாமையாகிய அறமே முதன்மையானது. இதனை,

"அறவினை யாதெனின் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாந் தரும்"[5]

என்றும்

ஒருவனுக்கு நல்லது பிற உயிர்களைக் கொல்லாதிருப்பது. அதைச் சார்ந்து நல்லதாக உள்ளது பொய் பேசாதிருப்பது.

"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று"[6]

என்றும்

"கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு"[7]

என்றும் குறிப்பிடுகின்றார்.

எந்த ஓர் உயிரையும் கொலை செய்யாது புலால் உண்ணாது வாழ்பவர்களை இவ்வுலகிலுள்ள எல்லா உயிர்களும் கைகூப்பி வணங்கும். இதனை,

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்ல ாஉயிரும் தொழும்"[8]

என்றகுறள் புலால் மறுத்தலை வலியுறுத்துகிறது இதன்வழி உயிர்க்கொல்லாமை நிலையைத் திருவள்ளுவர் உணர்த்துகிறார். புலால் உண்பது மனிதநெறி அல்ல என்பது வள்ளுவரின் கருத்தாக உள்ளது. இன்றைய மனிதர்களின் உணவு முறையில் சைவஉணவே சிறந்தது என்பதை அறிவியல் ஆய்வுகள் மூலம் மேலைநாட்டு உணவியல் வல்லுனர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

உயிர்க்கொலை உயிர்ப்பலி கூடாது எனச் சட்டம் கொண்டுவந்துள்ள நிகழ்காலச் சூழலில் வள்ளுவரின் வாழ்வியல் நெறி வெற்றிபெற்றுள்ளதாகவே கருதலாம்.

அன்பு, பண்பு, நட்பு போன்ற வாழ்வியல் இலக்குகளை எளியமுறையில் மனித மனம் ஏற்கும் வகையில் எடுத்துக்கூறி தனிமனித வாழ்க்கையை திருவள்ளுவர் பண்படுத்தியுள்ளார்.

பிற்காலத்தில் தோன்றிய மணிமேகலைக் காப்பியத்தில் கள்ளுண்ணாமை, கொல்லாமை முதலான அறங்கள் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. அவரவர் செயலுக்கேற்ப நமக்கு சுவர்க்கமோ நரகமோ கிடைக்கும் என்று கூறுகிறது மணிமேகலை. இதனை,

“மயக்கும் கள்ளும் மன்னுயிர் கோறலும்
கயக்கறுமாக்கள் கடிந்தனர்”[9]

என்ற பாடல் வரிகள் வெளிப்படுத்துகிறது.

திருவள்ளுவரின் கருத்துக்கேற்ப அருட்பிரகாசவள்ளலார் நன்மையையும் தீமையையும் பகுத்துணரக்கூடிய மனிதர்கள் தம் இனத்தார் படும் துயரங்களையும் விலங்கு பறவை முதலிய அ∴றிணை உயிர்கள் படும் துன்பத்தையும் கண்டு அத்துன்பங்களை நீக்குவதற்குரிய அருள் முயற்சியாகிய இரக்க உணர்வினைப் பெறுதல் வேண்டுமென்பது வள்ளலாரின் உயிர் இரக்கமாகிய ஒழுக்கநெறியின் குறிக்கோளாகும்.

## ஒழுக்கநெறி

மனிதவாழ்க்கைக்குத் தேவையான ஒழுக்கநெறிகளைத் திருவள்ளுவர் தாம் இயற்றியத் திருக்குறளில் எடுத்து இயம்பியுள்ளார். பிறர் கூறும் இன்னாசொற்களைப் பொறுத்தல், மற்றவர்களிடம் இன்சொற்களையே பேசுதல், பிறரது உயர்வைக் கண்டு அழுக்காறின்றி இருத்தல், பிறர் பொருளைக் கவரவிரும்பாமை, முன்னுக்குப்பின் மாறுபாடான சொற்களைச் சொல்லாது இருத்தல், தீவினைக்கு அஞ்சிவாழ்தல், இல்லாதார் தேவையை அறிந்து அறம் புரிதல் இவ்வாறு ஒழுக்கநெறியோடு வாழவேண்டும் என்கிறார்.

மக்கள் அனைவரும் ஒழுக்கத்தோடு வாழவேண்டும். ஒழுக்கத்தோடு வாழ்ந்தால் மேன்மை அடைவர். ஆகவே ஒழுக்கம் உயிரைவிடச்சிறந்ததாகப் போற்றப்படுகிறது. இதனை,

“ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்”[10]

என்ற குறட்பாவில் கூறியுள்ளார்.

நல்லொழுக்கம் இன்பமான வாழ்வுக்குத் துணையாகும். தீயஒழுக்கம் எப்போதும் துன்பத்தைக் கொடுக்கும். இதனை,

“நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பைத் தரும்”[11]

என்று அறிவுறுத்தியுள்ளார்.

ஒழுக்க நெறிகள் காலம், இடம், குலம் முதலியவற்றிற்கேற்ப மாறும் சூழல் உருவாகும்போது எந்தநிலையிலும் மாறாது இருக்கும் நெறியினைப் பின்பற்ற வேண்டும்.

பிறர் பொருளைக் கவரநினைக்காமல் தன்நெஞ்சைக் காத்துக்கொள்ள வேண்டும். அப்படி வாழ்ந்தால் பிறர் நம்மை இகழாமல் வாழலாம்.

“எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு”[12]

இக்குறளின்வழி பிறர் பொருளை அபகரிக்கக்கூடாது என்று வலியுறுத்திக் கூறியுள்ளார். பிறருடைய பொருளையாரும் அறியாத வகையில் வஞ்சித்துக் கொள்வோம் என்று மனதில் நினைப்பதே குற்றம் என்கிறார்.

ஒருவன் தன் மனதில் கோபத்தை நினைக்காமல் இருப்பான் என்றால் அவன் நினைத்த நன்மைகள் எல்லாம் அவனை வந்துசேரும் என்கிறார். நாம் நினைப்பதெல்லாம் நமக்குக் கிடைக்கவேண்டும் என்றால் சினத்தைக் கைவிடவேண்டும். இதனை,

“உள்ளியது எல்லாம் உடன்எய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின்”[13]

என்ற குறளின் வழி அறியமுடிகிறது.

தன்உயிரைக் காத்துக்கொள்ள வேண்டும் என்றால் கோபம் வராதுகாத்துக்கொள்ள வேண்டும். அப்படிகோபத்தைக் காக்காவிட்டால் அது அவனையே அழத்துவிடும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

ஒருவன் தன்னைத் துன்பத்திலிருந்து காத்துக்கொள்ள கோபத்தை அடக்கவேண்டும். இல்லாவிட்டால் கோபித்தவனையே அதுஅழித்துவிடும். இதனை,

“தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம்”[14]

என்ற குறளின் வழி கோபத்தைகைவிட வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

### இன்னாசெய்யாமை

எவ்வளவு சிறியதாயினும் எக்காலத்திலும் எவரிடத்திலும் மனதால் எண்ணி உண்டாகின்ற துன்பசெயலை செய்யாமல் இருப்பதே உயர்ந்தது என்கிறார். இதனை,

"எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணாசெய் யாமை தலை"[15]

என்ற குறளின் மூலம் அறியமுடிகிறது.

முற்பகலில் மற்றவருக்குத் துன்பமானவற்றை செய்தால் அவ்வாறு செய்தவர்க்கே பிற்பகலில் துன்பங்கள் தாமாக வந்துசேரும். இதனை,

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும்"[16]

என்றும் கூறியுள்ளார். எந்தஒரு காலத்திலும் யாருக்கும் மனதளவில்கூட துன்பங்கள் செய்யக் கூடாது என்ற எண்ணம் இருக்க வேண்டும் என்பது வள்ளுவப் பெருந்தகையின் வாழ்வியல் ஒழுக்கமாக அமைகிறது.

பிறர் தமக்குச் செய்கின்ற தீங்கைப் பொறுத்துக்கொள்ள வேண்டும். தன்னை வெட்டுவோரையும் விழாமல் தாங்குகின்ற நிலம்போலத் தம்மை இகழ்ந்து பேசுபவர்களையும் பொறுத்துக்கொள்ள வேண்டும். இதனை,

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை"[17]

என்ற குறளின் வழி எடுத்துக் கூறியுள்ளார்.

தனக்குத் துன்பம் செய்தவரை தண்டித்தல் அவர் வெட்கப்படும்படியான நன்மையை அவருக்கச் செய்திடவேண்டும் என்கிறார். இதனை,

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்"[18]

என்ற குறளின் வழி அறிகிறோம். இக்கருத்திற்கு வலுசேர்ப்பது போன்று இயேசுபெருமான் ஒரு கண்ணத்தில் அரைந்தால் மறு கண்ணத்தையும் காட்டு என்று கூறியுள்ளார். தனக்குத் துன்பம் செய்தவர்களுக்கும் அன்புகாட்டினார்.

### அறநெறிப்பட்டவாழ்க்கை

மனிதவாழ்வு என்பது ஒருகுறுகிய வட்டத்திற்குள் நின்று விடாமல் விரிந்து பரந்து அமைய வேண்டும். மனிதமனங்களை விரிவுபடுத்தி அறவழிப்பட்ட சமுதாயத்தை உருவாக்கவேண்டும் என்பது திருவள்ளுவரின் நோக்கமாக இருந்துள்ளது என்பதை அவர் இயற்றிய திருக்குறளின் வழி அறியமுடிகிறது.

மனமாசின்றிவாழும் வாழ்க்கை சிறப்புடையது. அதுவே அறங்களில் எல்லாம் முழுமையானது. இதனை,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற"[19]

என்ற குறள் வெளிப்படுத்துகிறது.

தன் மனத்தில் குற்றம் இல்லாமல் வாழும் வாழ்க்கையே சிறந்தஅறம் ஆகும். மற்றவை எல்லாம் ஆரவாரத் தன்மை கொண்டவை. இதில் அறம் பற்றிய இலக்கிய மரபுசார்ந்த கருத்தாக்கத்தை திருவள்ளுவர் மாற்றி அமைக்கிறார். வாழ்வில் மனத்தூய்மையை அறமாகக் கொள்ளவேண்டியதன் தேவையை உணர்த்தியுள்ளார் வள்ளுவப்பெருந்தகை.

அறம் என்பது இவ்வுலகில் வாழும் உயிர்களுக்கு உணவும் உடையும் உறையுளும் கொடுப்பதே சிறந்தஅறம் என்று மணிமேகலைக் குறிப்பிடுகிறது. இதனை,

"அறமெனப்படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள்
மன்னுயிர்க் கெல்லாம் உண்டியும் உடையும்
உறையுளும் அல்லது கண்டது இல்"[20]

என்ற மணிமேகலை பாடல் அடிகள் வழி அறியமுடிகிறது

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த திருமூலர் அறம் பற்றி கூறிய கருத்துகள் ஏற்புடையதாக உள்ளது. இவ்வுலகில் வாழும் உயிர்களுக்கு நாம் ஒன்றைக் கொடுத்தால் அது இறைவனுக்கு கொடுப்பதாக அமையும் என்கிறார் திருமூலர். இதனை,

"படமாமடக் கோயில் பகவற்கு ஒன்றுஈயில்
நுடமாடக் கோயில் நம்பர்க்கு அங்குஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்றுஈயின்

படமாடக் கோயில் பகவற்கு அதுஆமே”[21]

என்ற பாடல் வெளிப்படுத்துகிறது.

கிறித்துவ திருமறையான புதிய ஏற்பாட்டிலும் ஏசுபெருமான் “உணவு இன்றி இருந்தேன் எனக்கு உணவு கொடுத்தீர்கள், ஆடையின்றி இருந்தேன் எனக்கு ஆடை கொடுத்தீர்கள், நோயுற்று இருந்தேன் என்னைப் பார்க்கவந்தீர்கள், என்று மலைப் பொழிவில் கூறினார்.”[22] ஏழைஎளியவர்களுக்கு செய்தது எல்லாம் இறைவனுக்கே செய்தது என்று கூறியுள்ளார். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த திருமூலர் கூறிய கருத்துகளும் மணிமேகலைக் காப்பியம் கூறியுள்ள கருத்துகளும் மனிதர்களை நேசிக்கவேண்டும் என்பதையே வெளிப்படுத்துகிறது.

## முடிவுரை

திருக்குறள் நீதிநூல் மட்டுமன்று அது ஒரு வாழ்வியல் நூல். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மனிதனுக்காக மட்டுமல்ல இந்த நூற்றாண்டின் புதியதலை முறையினர்க்கும் வழிகாட்டும் புரட்சிநூல். வள்ளுவத்தின் பொருண்மை காலந்தோறும் புதிய புதிய கருத்தாக்கங்களைத் தந்து இனம்,மொழி, நாடு என்னும் எல்லைகளைக் கடந்து மனிதவாழ்க்கையை வளப்படுத்துகிறது.

### அடிக்குறிப்புகள்

1. பாரதியார், பாரதியார் கவிதைகள், செந்தமிழ்நாடு, வரிகள் 25 – 26.
2. மதுரைத்தமிழ்நாகனார், திருவள்ளுவமாலை, 29.
3. திருவள்ளுவர், திருக்குறள், 80.
4. திருவிவிலியம், புதியஏற்பாடு,1 கொரிந்தியர்,அதிகாரம் 13, இறைவசனம் 4 – 8.
5. திருவள்ளுவர், திருக்குறள், 321.
6. திருவள்ளுவர், திருக்குறள், 323.
7. திருவள்ளுவர், திருக்குறள், 984.
8. திருவள்ளுவர், திருக்குறள், 260.
9. மணிமேகலை, ஆதிரைபிச்சையிட்டகாதை, வரிகள் 84 – 85.
10. திருவள்ளுவர், திருக்குறள், 131.
11. திருவள்ளுவர், திருக்குறள், 138.
12. திருவள்ளுவர், திருக்குறள், 281.
13. திருவள்ளுவர், திருக்குறள், 309.
14. திருவள்ளுவர், திருக்குறள், 305.
15. திருவள்ளுவர், திருக்குறள், 317.
16. திருவள்ளுவர், திருக்குறள், 319.
17. திருவள்ளுவர், திருக்குறள், 151.
18. திருவள்ளுவர், திருக்குறள், 314.
19. திருவள்ளுவர், திருக்குறள், 34.
20. மணிமேகலை, ஆபுத்திரனோடுமணிபல்லவம் அடைந்தகாதை, வரிகள் 228 - 231.
21. திருமூலர், திருமந்திரம், ஏழாம் தந்திரம், மகேசுவரபூசை, பாடல்எண் 1.
22. திருவிவிலியம், புதியஏற்பாடு,

## துணைநின்ற நூல்கள்

1. .பாரதியும் பாரதிதாசனும், டாக்டர்.சி.பாலசுப்பிரமணியன், நறுமலர்ப் பதிப்பகம், சென்னை, பதிப்பு1992,
2. திருவள்ளுவமாலை மூலமும் எளியஉரைவிளக்கமும், ஆசிரியர் புலவர் ராம.வேதநாயகம், மணிமேகலைபிரசுரம், சென்னை.
3. திருக்குறள், திருவள்ளுவர், உரையாசிரியர் புலவர் செந்துறைமுத்து, கங்கைபுத்தகநிலையம், சென்னை, ஒன்பதாம் பதிப்பு 2016.
4. திருவிவிலியம் (இணைத்திருமுறையுடன்), பொதுமொழிபெயர்ப்பு, தமிழ்நாடு பிப்பிலிகல் கத்தகட்டிகல் மற்றும் லிட்டர்ஜிகல் சென்டர், திண்டிவனம் 02 மறுபதிப்பு 2012
5. மணிமேகலை, ஆசிரியர் சீத்தலைச்சாத்தனார், உரையாசிரியர் ந.மு.வேங்கடசாமிநாட்டார், ராமையாபதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு 2008.